Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 5, No.2, 2024, (1-6)

# ‘Problem-Based Learning' (PBL) அணுகுமுறையின் வழி படிவம் 1 மாணவர்களிடையே திறம்படப் பேசும் ஆற்றலை மேம்படுத்துதல்

## Meningkatkan kemahiran bertutur secara efektif dalam kalangan pelajar tingkatan 1 melalui pendekatan ‘Pembelajaran Berasaskan Masalah’

**Priyatarsini Arumugam**

Faculty of Languages and Communication
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia
email: d100669@siswa.upsi.edu.my

**Published:** 15 October 2024

**To cite this article (APA):** Arumugam, P. (2024). ‘Problem-Based Learning’ (PBL) அணுகுமுறையின் வழி படிவம் 1 மாணவர்களிடையே திறம்படப் பேசும் ஆற்றலை மேம்படுத்துதல்: Meningkatkan kemahiran bertutur secara efektif dalam kalangan pelajar tingkatan 1 melalui pendekatan ‘Pembelajaran Berasaskan Masalah’ . *Journal of Valartamil*, *5*(2), 1-6. https://doi.org/10.37134/jvt.vol5.2.1.2024

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol5.2.1.2024

**Abstract:** Tujuan kajian ini adalah untuk mengenal pasti masalah yang dihadapi oleh pelajar Tingkatan 1 dalam bertutur secara efektif dan meningkatkan keupayaan bertutur mereka melalui pendekatan ‘Pembelajaran Berasaskan Masalah’. Kajian ini dijalankan di Sekolah Menengah Durian Tunggal, Melaka dengan melibatkan seramai 15 orang pelajar Tingkatan 1 dan tiga orang guru. Dalam kajian ini, pendekatan kuantitatif dan kualitatif digunakan. Data dikumpulkan melalui ujian pra, ujian pasca, soal selidik, dan pemerhatian. Sepanjang kajian, didapati bahawa pelajar menghadapi pelbagai masalah dalam bertutur secara efektif. Oleh itu, pendekatan ‘Pembelajaran Berasaskan Masalah’ digunakan untuk meningkatkan keupayaan bertutur pelajar. Hasil kajian menunjukkan bahawa pendekatan ‘Pembelajaran Berasaskan Masalah’ dapat membantu meningkatkan keupayaan bertutur secara efektif dalam kalangan pelajar.

**Kata kunci:** Pembelajaran Berasaskan Masalah, Sekolah Menengah Durian Tunggal, Tingkatan 1, keupayaan bertutur

**சுருக்கம்:** இந்த ஆய்வின் நோக்கம், படிவம் 1 மாணவர்கள் திறம்பட பேசுவதில் எதிர்கொள்ளும் சிக்கல்களைக் கண்டறிந்து, 'பிரச்சினை அடிப்படையிலான கற்றல்' அணுகுமுறை மூலம் அவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்துவதாகும். மொத்தம் 15 படிவம் 1 மாணவர்கள் மற்றும் மூன்று ஆசிரியர்களை உள்ளடக்கிய செகோலா மெனெங்கா துரியன் துங்கல், மேலாகாவில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வில், அளவு மற்றும் தரமான அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டன. முன் சோதனைகள், பிந்தைய சோதனைகள், கேள்வித்தாள்கள் மற்றும் அவதானிப்புகள் மூலம் தரவு சேகரிக்கப்பட்டது. ஆய்வு முழுவதும், மாணவர்கள் திறம்பட பேசுவதில் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்வது கண்டறியப்பட்டது. எனவே,

மாணவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்த, 'பிரச்சினை அடிப்படையிலான கற்றல்' அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. 'பிரச்சினை அடிப்படையிலான கற்றல்' அணுகுமுறை மாணவர்களிடையே திறம்பட பேசும் திறனை மேம்படுத்த உதவும் என்பதை ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன.

**முக்கிய வார்த்தைகள்:** சிக்கல் அடிப்படையிலான கற்றல், துரியன் துங்கல் உயர்நிலைப் பள்ளி, படிவம் 1, பேசும் திறன்

## முன்னுரை

மலேசிய நாட்டின் கல்வி கொள்கையும் தேசியக் கலைத்திட்டமும் அறிவு, திறன், நெறிமுறை, பண்பு, கலாச்சாரக் கூறுகள், நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கலைத்திட்ட மற்றும் புறப்பாட நடவடிக்கைகான ஒரு கல்வித்திட்டமாகும் (Dokumen Standard Kurikulum dan Pentaksiran Bahasa Tamil Tingkatan 1, Bahagian Pembangunan Kurikulum 2015). இத்திட்டமானது மாணவர்கள் உடல், ஆன்மிகம், அறிவாற்றல் மற்றும் உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியை முழுமையாகப் பெற்றிருக்க வகை செய்வதோடு மாணவர்களுக்கு வேண்டிய பண்புகளை விதைத்து அவற்றை மேம்படுத்தவும் பின்னர் அவர்கள் அறிவைப் பெறவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும், நம் நாட்டின் கல்விக் கொள்கைக்கேற்ப இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழி ஒரு கூடுதல் மொழிப்பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. இதற்குரிய கலைத்திட்டம் தொடக்கப்பள்ளித் தமிழ்க் கலைத்திட்டத்தின் வளர்ச்சியாக விரிவடைகிறது. அவ்வகையில் தொடக்கப்பள்ளியில் பெற்ற தமிழ்மொழியாற்றலை மேலும் வளப்படுத்துவதோடு தேசியக் கல்வித் தத்துவத்திற்கிணங்க மாணவர்களின் அறிவாற்றல், ஆன்மிகம், உடல் மற்றும் உள்ளம் ஆகிய கூறுகளிலும் சமன்நிலை வளர்ச்சி அடைவதை இக்கலைத்திட்டம் வலியுறுத்துகின்றது.

கேட்டல் பேச்சு தேசியக் கலைத்திட்டலுள்ளள ஒரு மொழித் திறனாகும். கேட்டல் பேச்சுத் திறன்வழி மாணவர்கள் அன்றாட வாழ்வில் கிடைக்கப்பெறும் தகவல்களைச் சீர்தூக்கிப்பார்த்து, குறிப்பிட்ட துறையைச் சார்ந்த ஏடல்களைச் சூழலுக்கு ஏற்பத் தரமான மொழியில் வெளியிடுவர். மேலும், முதலில் மாணவர்கள் ஆசிரியர் கொடுக்கும் தலைப்பினையொட்டி திறம்படப் பேச தெரிந்திருக்க வேண்டும். அதனால்தான், மலேசியத் தமிழ்மொழி படிவம் 1 பாடத்திட்டத்தில் 1.3 திறம்படப் பேசுவர் என்ற உள்ளடகத் தரம் இடம்பெற்றுள்ளது. பின், மலேசியத் தமிழ்மொழி படிவம் 1 பாடத்திட்டத்தில் 1.3 திறம்படப் பேசுவர் எனும் உள்ளடகத் தரத்தின் கீழ் 1.3.1 நிகழ்ச்சியை அறிவுப்புச் செய்வர் மற்றும் 1.3.2 பிரியாவிடை உரையாற்றுவர் எனும் கற்றல் தரம் இடம்பெற்றுள்ளது. அதாவது, ஒரு மாணவன் தனக்குக் கொடுக்கப்படும் தலைப்புகளையொட்டி திறம்படப் பேச வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது.

எனவே, இவ்வாய்வு ‘Problem-Based Learning’ அணுகுமுறையின் வழி படிவம் 1 மாணவர்களிடையே திறம்படப் பேசும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது. படிவம் 1 மாணவர்களின் திறம்படப் பேசும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு ‘Problem-Based Learning’ அணுகுமுறை ஒரு விளைபயன்மிக்க அணுகுமுறையாகும்.

‘Problem-Based Learning’ என்பது மாணவர்கள் குழு வாரியாக அமர்ந்து தங்களின் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் ஓர் அணுகுமுறையாகும். வகுப்பில் மாணவர்கள் ஒரு குழுவில் மூன்று, நான்கு அல்லது ஐந்து பேர்களாக அமர்ந்து பின் ஆசிரியர் கொடுக்கும் பாடங்களைக் குழுவில் கலந்துரையாடி செய்வதாகும். அதுமட்டுமல்லாது, முதல் நிலை, இடை நிலை மற்றும் கடை நிலை என்றே ஒவ்வொரு குழுவாக மாணவர்கள் பிரிக்கப்படுவர். அவ்வாறு, மாணவர்களை அமர வைப்பதன் நோக்கம் என்னவென்றால் மூன்று நிலை மாணவர்களும் ஒருவருக்கொருவர் கலந்துரையாடி பின் உதவி செய்து கொண்டு ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகும். மேலும், ‘Problem-Based Learning’ என்பது ஒரு சிக்கலைச் சுலபமாக கலையும் அணுகுமுறையாகும். அதுமட்டுமல்லாது, இவ்வணுகுமுரையானது ஒரு மாணவனின் புரிதலையும் மற்றும் பாடத்திலுள்ள ஆர்வத்தையும் வெளிக்காட்டும். ஏனெனில், மாணவர்கள் சிறு குழுக்களாகப் பிரிந்து கொடுக்கப்படும் வேலைகளைச் செய்யும் போது அவர்கள் தங்கள் நண்பர்களோடு தயக்கமின்றி கலந்துரையாடி வேலைகளைச் செய்துக் கொள்வர். (பால் மேயின், 2021).

## ஆய்வுப் பின்னணி

படிவம் 1 மாணவர்களிடத்தில் திறம்படப் பேசும் ஆற்றலை மேம்படுத்துவது சிக்கலாகவே உள்ளது. அந்நிலையில், இச்சிக்கலை எதிர்கொள்ளவே ‘Problem-Based Learning’ அணுகுமுறை இந்த ஆய்வில் மேற்கொள்ளப்படுகின்றது. மாணவர்கள் ‘மாணவர்-மாணவர்’ தொடர்பு கொள்வதன் மூலம் அவர்களுக்கு மிக சுலபமாக ஒரு புரிந்துணர்வு ஏற்படும் (அஷ்லே மோந்தகு, 2001). மேலும், ‘Problem-Based Learning’ அணுகுமுறையின் வழி நிச்சயமாக மாணவர்களால் தரமான ஒரு படைப்பைப் படைக்க இயலும். அதுமட்டுமல்லாது, மாணவர்களிடையே நல்ல உறவையும் மேம்படுத்த இது ஒரு சிறந்த அணுகுமுறை என்று ஆய்வாளர் கருதுகிறார்.

## ஆய்வுச் சிக்கல்

தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் கேட்டல் பேச்சு திறனுக்கு மிகவும் முக்கியமான பங்கு உண்டு. கேட்டல் பேச்சு திறனில் மாணவர்கள் கேட்கும் செய்திகளையும் பேசும் கருத்துகளையும் தெளிவாகப்

பிறருக்குப் புரியும் வகையில் கூறுவது அவசியாமாகும். அவ்வாறு, அமைந்தாலே அன்றைப் பாடத்தின் கற்றல் தரம் அடைந்துள்ளது எனப்படும். அந்நிலையில், கேட்டல் பேச்சு திறன் என்பது மிகவும் முக்கியமான ஒரு திறனாகும். ஏனெனில் ஒவ்வொரு மாணவர்களும் தாங்கள் கேட்கும் கருத்துகளை பிறரிடம் கூறும் போது தெளிவாக மற்றவர்களுக்குப் புரியும் வகையில் கூறினால் மட்டுமே கேட்பவர்களுக்குக் கூறவருபவர் எதனைப் பற்றி கூறுகின்றார் என்று புரியும்.

இடைநிலைப்பள்ளி மாணவர்கள் பொதுவாகவே கேட்டல் பேச்சு திறனில் சில சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அதிலும், குறிப்பிட்டு பார்க்கையில் இடைநிலைப்பள்ளியில் பயிலும் படிவம் 1 மாணவர்கள் திறம்படப் பேசுவதில் அதிகமான சிக்கல்களை எதிநோக்குகின்றனர். எடுத்துக்காட்டாக, வழக்கமாகவே மாணவர்களுக்கு முன் வந்து ஒரு தலைப்பையொட்டி பேசுவதில் தடுமாற்றமும் பயமும் உண்டு. ஏனென்றால், மாணவர்கள் போதுமான கருத்து, சொல் உச்சரிப்பு, மொழி வளம், சரளம், கருத்துகள் உருவாக்குவதில் அதிக சிக்கலை எதிர்நோக்குகின்றனர்.

அவ்வகையில், இடைநிலைப்பள்ளியில் பயிலும் படிவம் 1 மாணவர்கள் திறம்படப் பேசுவதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். அதாவது, புஸ்தாமி உஸ்மான் (2021) என்பவர் மாணவர்களுக்குக் கருத்துகள் பற்றாக்குறையாக இருப்பதினால் திறம்படப் பேசுவதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர் என்கின்றார். எடுத்துக்காட்டாக, ஆசிரியர் கேட்டல் பேச்சு திறனையொட்டி திறம்படப் பேசுவர் எனும் பாடத்தைக் கற்பிக்கின்றார். அக்கற்றல் கற்பித்தலின் போது, ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு தலைப்பை வழங்கி அதனையொட்டி வகுப்பின் முன் வந்து பேச கூறுகையில் வகுப்பிலுள்ள இடை நிலை மற்றும் கடை நிலை மாணவர்கள் சிரமப்படுகின்றனர். அதாவது, வகுப்பிலுள்ள இடை நிலை மற்றும் கடை நிலை மாணவர்களுக்கு ஆசிரியர் வழங்கிய தலைப்பையொட்டி போதுமான கருத்துகளைச் சேகரிக்க இயலாததால் அம்மாணவர்களால் திறம்படப் பேச முடியவில்லை என்கின்றார். எனவே, போதுமான கருத்துகளைச் சேகரிக்க இயலாததால் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் திறம்படப் பேசுவதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர்.

தொடர்ந்து, ரிஸால் ஃப்ஹமி, (2021) என்பவர் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் பொதுவாகவே திறம்படப் பேசுவதில் பல சிக்கல்களை எதிநோக்குகின்றனர் என்றுள்ளார். அதாவது, மாணவர்களுக்கு அதிகமான உச்சரிப்பு பிழைகள் ஏற்படுவதனால் அவர்கள் திறம்படப் பேசுவதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர் என்கின்றார். எடுத்துக்காட்டாக, உச்சரிப்புப் பிழை என்பது அனைவருக்கும் இருக்கும் ஒரு சாதாரனமான ஒரு விஷயமாகும். ஆனால், அதுவே அதிகமாக இருந்தால் நாம் அதனைச் சரி செய்தே ஆக வேண்டும். உதாரணத்திற்கு, ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு தலைப்பை வழங்கி அதனையொட்டி வகுப்பின் முன் வந்து பேச கூறுகையில் வகுப்பிலுள்ள

பல மாணவர்கள் சரியான உச்சரிப்போடு பேச சிரமப்படுகின்றனர். அதாவது, வகுப்பிலுள்ள முதல், இடை மற்றும் கடை நிலை என அனைத்து மாணவர்களுமே ஆசிரியர் வழங்கிய தலைப்பையொட்டி பேசுகையில் அதிகமான உச்சரிப்பு பிழைகளைச் செய்கின்றனர். போதுமான கருத்துகளைச் சேகரிக்க இயலாததால் அம்மாணவர்களால் திறம்படப் பேச முடியவில்லை என்கின்றார். ஆகையால், அதிகமான உச்சரிப்பு பிழைகள் செய்வதனால் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் திறம்படப் பேசுவதில் சிக்கைலை எதிர்நோக்குகின்றனர்.

## ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவை:

i. படிவம் 1 மாணவர்கள் திறம்படப் பேசுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிதல்.
ii. ‘Problem-Based Learning’ அணுகுமுறையின் வழி படிவம் 1 மாணவர்களிடையே திறம்படப் பேசும் ஆற்றலை மேம்படுத்துதல்.

## வினா

வினா 1: படிவம் 1 மாணவர்கள் திறம்படப் பேசுவதில் ஏற்படும் சிக்கல்கள்யாவை?

இவ்வாய்வில் ஆய்வாளர் படிவம் 1 மாணவர்கள் திறம்படப் பேசுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிவதற்காக முதலில் மூன்று ஆசிரியர்களை நேர்காணல் செய்தார். நேர்காணலின் வழி ஆசிரியர்களிடமிருந்து பதில்களைப் பெற்றவுடன் ஆய்வாளர் முன்னறித் தேர்வாக வகுப்பில் மாணவர்களுக்கு ஒரு தலைப்பை வழங்கி அதனை தனிநபராக பேச சொல்லி அதிலுள்ள சிக்கல்களை மதிப்பீட்டுத் தாளைக் கொண்டு மதிப்பீட்டு கண்டறிதார்.

## நேர்காணல்

ஆய்வாளர் ஆய்வின் முதல் நோக்கமான படிவம் 1 மாணவர்கள் திறம்படப் பேசுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிவதற்கு, முதலில் நேர்காணலை மேற்கொண்டார். அந்நிலையில், ஆய்வாளர் அந்நேர்காணலுக்காக மூன்று ஆசிரியர்களை தேர்வு செய்து நேர்காணலை மேற்கொண்டார். அந்நேர்காணலில், ஒவ்வொரு ஆசிரியர்களும் சில கேல்விகளுக்கு சமமான பதில்களையும் மேலும் சில கேள்விகளுக்கு வெவ்வேறான பதில்களையும் கொடுத்துள்ளனர். எனவே, இந்நேர்காணலில் வழி ஆசிரியர்கள் வழங்கிய பதில்களின் மூலம் மாணவர்கள் திறம்படப் பேசுவதில் எதிர்நோக்கும் முதன்மை சிக்கல்கள் என்னவென்றால் கருத்துக்களைக் கூறுவது, மொழி வளம்,

சொல் வளம் மற்றும் சரளமாகும். அதுமட்டுமல்லாது, பயம் மற்றும் தடுமாற்றமும் கூட மாணவர்கள் திறம்படப் பேசுவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள் என்கின்றனர் ஆசிரியர்கள். மேலும், பேச்சு மொழி பயிற்சியில் 50% விழுக்காட்டு மாணவர்களே ஆர்வமாக உள்ளனர் என்றுள்ளனர் ஆசிரியர்கள். ஆகவே, இந்நேர்காணலின் வழி படிவம் 1 மாணவர்கள் திறம்படப் பேசுவதில் எதிர்நோக்கிய சிக்கல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

## முடிவு

ஆகவே, இந்த இயலில் ஆய்வாளர் தம்முடைய ஆய்விற்குச் சேகரித்த தரவுகளைப் பகுப்பாய்வு செய்து முடிவுகளை விளக்கப்படுத்தியுள்ளார். இந்த ஆய்வு இரண்டு நோக்கங்கள் அடிப்படையில் நடத்தப்பட்டது. இந்த ஆய்வின் மூலம் 'Problem Based Learning' (PBL) அணுகுமுறையின் வழி படிவம் 1 மாணவர்களிடையே திறம்படப் பேசும் ஆற்றலானது மேம்பட்டிருக்கின்றது. முதன் முதலில், 'Problem Based Learning' (PBL) அணுகுமுறையை வழி படிவம் 1 மாணவர்களிடையே திறம்படப் பேசும் ஆற்றலை மேம்படுத்துதல் என்ற ஆய்வினைத் தமிழ்மொழியில் ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வானது மற்ற ஆய்வாளர்களுக்கு உதவும் வகையிலும் அமைந்துள்ளது. இந்த ஆய்வானது, ஆய்வாளர்களுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் நன்மைகள் அளிக்கும் என்பது ஆய்வாளரின்கருத்தாகும்.

## References

Bahrudin, D,V. (2018). Improving Students 'Speaking Ability on Expressing Plan through Problem Based Learning (PBL) Method. DOI: (http://dx.doi.org/10.19105/ojbs.v12i2.2086)

Brown, H.D. (2004). Language Assessment Principle and Classroom Practice. New York: Pearson Education.